பட்டுச் சேலைகளின்
சோலையாகத்
திகழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

பக்கங்கள். நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண, முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளுக்கு
சிறப்பான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி97-29

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 02 செவ்வாய்க்கிழமை (16 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 170

திருமலை திரியாய் காட்டுப் பகுதியில் அதிரடி தாக்குதலில் 14 படையினர் பலி!

புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள்

யாழ்ப்பாணம், மே. 16

திருமலை திரியாய் பகுதியில் நடத்திய அதிரடித்தாக்குதலில் படையினரிடமிருந்து பெருமளவு ஆயுத தளபாடங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். அவற்றின் விவரம் வருமாறு:-

★ ஆர். பி. ஜி	—	01
★ ஏ. கே. எல் .எம். ஜி	—	02
★ 60 மி மீ மோட்டர்	—	01
★ 40 மி மீ. பிஸ்டல்	—	01
★ ரீ 56 இரண்டு ரக துப்பாக்கி	—	05
★ ரீ 56 ஒன்று ரக துப்பாக்கி	—	04
★ ரீ 81 ரக துப்பாக்கி	—	01
★ ரீ 56 பட் மொடல் துப்பாக்கி	—	02
★ ஆர். பி. ஜி ஷெல்	—	03
★ ஆர். பி. ஜி புரொப்பள்	—	03
★ ஏ. கே மகஸின்	—	27
★ ஏ.கே எல்.எம் ஜி. தொடர்ரவை	—	ஆயிரம்
★ நடுத்தர ரவை	—	4,093
★ 60 மி. மீ ஷெல்	—	12
★ 40 மி மீ ஷெல்	—	05
★ கிளைமோர்	—	01
★ 60 மி. மீ பூஸ்ரர்	—	2 பெட்டி
★ 60 மி. மீ. பரா லைற்	—	02
★ 40 மி. மீ. பராலைட்	—	03
★ ஏ 200 ரக கிரனேட்	—	35
★ வெடிக்க வைக்கும் கருவி	—	01
★ வயர் றோல்	—	01
★ இராணுவ சப்பாத்து	—	7 சோடி
★ தண்ணீர் கான்	—	04
★ ஏ. கே எல் எம் ஜி. ஹோல்ஸர்	—	04
★ ஏ. கே. மகஸின் ஹோல்ஸர்	—	14
★ மழைக் கவசம்	—	04
★ பைகள்	—	13

(ஐ-4)

தெற்கில் வெசாக் களைகட்டவில்லை!

கொழும்பு, மே 16

தலைநகர் கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் வெசாக் கொண்டாட்டங்கள் வழமைபோன்று இம்முறை சூடுபிடிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டதால் கொழும்பில் பலத்த பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மக்கள் நடமாட்டம் வழமைக்கு மாறாக குறைந்து காணப்பட்டது.

வீதிகளில் வழமையான கலகலப்பு காணப்படவில்லை.

தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக மக்கள் வீடுகளை விட்டு வெளியே நடமாடவில்லை என்று செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முக்கிய நகரங்களில் வெசாக் பந்தல்கள், தோரணங்கள் குறைவாகவே அமைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4-6]

குச்சவெளி மோதலில் 10 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 16

திருமலை குச்சவெளி காட்டுப்பகுதியில் தேடுதல் நடத்திவிட்டு திரும்பிய படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் காட்டுப் பகுதிகளில் கடும் மோதல் இடம்பெற்றது.

அந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 10 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த வேங்கைகளின் விவரம் வருமாறு:-

★ கப்டன் வேங்கையன் (இராசையா திவாகரன் — யாழ்ப்பாணம்.)

★ லெப்டினன்ட் ஜெயந்தன் அல்லது நீருதான் (மாலிங்கம் விக்னேஸ்வரன் — திருமலை)

★ லெப்டினன்ட் கருங்கதிர் (ஏகாம்பரம் முத்துலிங்கம்— மட்டக்களப்பு)

★ லெப்டினன்ட் சுமந்தன் [கந்தசாமி ஹரிகரன் — கிளிநொச்சி]

★ லெப்டினன்ட் சுமணன் (தம்பிப்பிள்ளை முரளி— மட்டக்களப்பு]

★ லெப்டினன்ட் தர்மராசா [முத்துக்குமார் சிவகுரு — வவுனியா]

★ வீரவேங்கை நவநீதன் [பாலசுந்தரம் சுவர்ணதாஸன் — யாழ்ப்பாணம்]

[4ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி

அப்ப போன மச்சான் திரும்பிவாறார் எண்டு சொல்லுங்கோ...

10 போராளிகளின் வீரச்சாவுக்கு விடுதலைப் புலிகள் நடத்திய பதிலடி

யாழ்ப்பாணம், மே 16

திருகோணமலை மாவட்டம் திரியாய் காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குலில் 14 படையினர் கொல்லப்பட்டனர்.

கடந்த சனியன்று திருமலையில் செட்டிமுறைக் காட்டில் படையினருடன் நடந்த மோதலில் 10 போராளிகள் வீரச்சாவடைந்த சம்பவத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இத்தாக்குதலை நேற்று விடுதலைப் புலிகள் நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக பதுங்கியிருந்த பின்னர் நேற்றுக் காலை 5.25 மணியளவில் முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்த படையணியே விடுதலைப் புலிகளின் இந்த வெற்றிகர அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது.

கல்லாறு இராணுவ முகாமில் இருந்து 400 மீற்றர் தொலைவில் வைத்து இத்தாக்குதலை புலிகள் நடத்தினர்.

இத்தாக்குதலில் 14 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

இச்சம்பவத்தில் ஏழு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அதிரடித் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-ஐ-7-5-4]

கிழக்கில் படை நடவடிக்கைகளை புலிகள் வெற்றிகரமாக முறியடிப்பு!

ஸ்ரீலங்கா அரசு உண்மைக்கு மாறாக பிரசாரம்

யாழ்ப்பாணம், மே 16

தென் தமிழீழத்தில், இராணுவம் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டு வரும் வேளையில், வெற்றிகரமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஸ்ரீலங்கா அரச உண்மைக்கு மாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை காட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளை அழிக்கும் இராணுவ நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசு, தனது சகல தொடர்பு சாதனங்கள் ஊடாகவும், உண்மைக்கு மாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது:

மேற்படி நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக முறியடிப்பதுடன், படையினருக்கு பாரிய இழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் அம்பாறையில் கஞ்சிகுடிச்சாறு காட்டில் ''ஒபரேசன் ஹோலடன் வோட்டர்'' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை மேற்கொண்ட இராணுவ படையணி, விடுதலைப் புலிகளால் முழுமையாக அழிக்கப்பட்டது.

மட்டக்களப்பு வாழைச்

(4 ஆம் பக்கம் பார்க்க]

உண்ணாவிரத போராட்டத்தை நேற்று மருத்துவ பீட மாணவர் கைவிட்டனர்!

யாழ்ப்பாணம், மே 16

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடமளிப்பது தொடர்பான பிரச்சினை, அது தொடர்பான இணக்க நிலை ஒன்று ஏற்பட்டதை அடுத்து நேற்று தீர்வுக்கு வந்தது.

அதனைத் தொடர்ந்து மருத்துவ பீட மாணவர்கள் தமது உண்ணாவிரதபோராட்டத்தை நேற்று கைவிட்டனர்.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 37 பேருக்கும் யாழ். மருத்துவ பீடத்தில் இடமளிப்பது என்றும் —

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் கல்வி பாதிக்காத வகையில் இந்த 37 மாணவர்களுக்கும் இடமளிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து டாக்டர் ஆனந்தராஜா தலைமையில் இயங்கும் 9 பேர் குழு ஒன்று ஆராய்ந்து ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் —

இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே, மருத்துவ பீட மாணவர்கள் தொடர்ந்து ஆறாவது நாளாகத் தாம் மேற்கொண்டு வந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்ட தகவல் எமது அலுவலகத்துக்குக் கிடைக்க முன்னர். இப்பிரச்சினை தொடர்பாக வந்துசேர்ந்த கருத்துக்கள் மூன்றாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன. (ஆ-ர்)

ரஷ்யா, உக்ரைன், இந்தோனேஷியா ராணுவ உதவி வழங்க இணக்கம்?

கொழும்பு, மே 16

ஸ்ரீலங்காவுக்குத் தேவையான இராணுவ உதவிகளை வழங்குவதற்கு இஸ்ரேல் மற்றும் இந்தோனேஷியா, உக்ரைன், ரஷ்யா ஆகிய நாடுகள் முன்வந்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தற்போது அவசியமாகத் தேவைப்படும் இராணுவ உதவிகள் என்னவென்பதை அறிந்து கொள்வதற்காக, இந்த நாடுகள் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருப்பதாக அறிய வருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளைக் கொண்ட இரு குழுக்கள் ஆயுதக் கொள்வனவு தொடர்பாகப் பேசுவதற்கு ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருப்பதையும் அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியது.

இஸ்ரேல் ஆயுத உதவி வழங்கினால் கொழும்பில் தூதரகம் திறக்கலாம்!

ஸ்ரீலங்கா தரப்பின் பேரம் இது

கொழும்பு. மே 16

ஆயுத உதவி வழங்க இஸ்ரேல் முன்வருமிடத்து அந்நாட்டின் தூதரகம் ஒன்று கொழும்பில் நிறுவப்படும் சாத்தியம் உண்டு [illegible] யமறிந்த அரசாங்க வட்டாரங்களில் இருந்து [illegible] கிறது.

இதற்கான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் இராஜதந்திர மட்டத்தில் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதி[illegible] அரசுக்கு இஸ்ரேல் ஆயுத உதவி வழங்கினால் கொழும்பில் இஸ்ரேலின் தூதரகம் ஒன்றைத் திறக்க அனுமதிக்க முடியும் — என்று ஸ்ரீலங்கா அரசு பேரம் ஒன்றை ஆரம்பித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

1970 — 1977க்கு இடைப்பட்ட காலத்தில் — சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

மோதலில் சிக்கி பொது மக்கள் மூவரும் பலி!

கொழும்பு, மே 16

திரியாய் பகுதியில் இடம்பெற்ற மோதலில் இடையில் அகப்பட்டு மூன்று பொது மக்களும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் அது பற்றிய மேல் விவரங்கள் எதுவும் தெரியவரவில்லை. [உ-4-5-7]

செட்டிகுளம் பகுதியில் படை நடவடிக்கை!

குடிமனை மீது அகோர ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், மே 16

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் நேற்று ஆரம்பித்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைக்காக பெரும் எண்ணிக்கையிலான துருப்பினர் செட்டிகுளம் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ள படையினர் குடியிருப்பு பகுதிகள் மீது சரமாரியான ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (ஐ-4]

படையினரின் உறவினருக்கு சலுகைகள் வழங்க பணிப்பு!

கொழும்பு, மே. 16

யுத்த முனையில் உள்ள இராணுவத்தினரின் குடும்பத்தினருக்கான சேமநலன்களை நன்கு கவனிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் போர்முனைகளில் உள்ள படையினரின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணங்களின் பெறுமதியை அதிகரிக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

படையினருக்கு உற்சாக மூட்டும் வகையிலான இத்தகைய செயற்பாடுகளில் ஜனாதிபதி தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளார். என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

விஷவாயு சூத்திரதாரி கைதானார்

டோக்கியோ, மே 16

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் கடந்த மார்ச் 20 ஆம் திகதி இடம்பெற்ற ''ஸரின்'' விஷவாயுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்ட ''அவும் ஷின்ரிகியோ'' மத அமைப்பின், முக்கிய உளவுப் பிரிவின் தலைவர் ஒருவரை ஜப்பானியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் கைது செய்யப்பட்டதை அடுத்து, இந்த விஷவாயு சம்பவத்திற்குத் தாமே பொறுப்பு என, ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ள இந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

படையினர் கெடுபிடியால் கப்பலில் பொருள்களை எடுத்துவர முடியாத நிலை

யாழ்ப்பாணம், மே. 16

கொழும்பில் இருந்து கப்பல்கள்மூலம் உணவு மற்றும்மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய பொருள்களை எடுத்துவர இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருகின்றனர் என்று கொழும்பு தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

வடக்கே எடுத்துவர 16 பொருள்களுக்கு அரசு தடைவிதித்திருந்த போதும், ஏனைய பொருள்களை எடுத்து வர முன்னர் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

ஆனால், தற்சமயம் உணவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

Canon AE-I Program Still Camara, Nikon FM-2 Still Camara, M-1000 வீடியோ கமரா, MX-10 மிக்சர் A V-5 மிக்சர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: நீகல் வீடியோ, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (8535)

பூச்சி நீக்கப்பட்ட அழகிய வெள்ளை நிற பொமிரேனியன் ஆண் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 81/1, (257), கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். [36656]

வர்த்தகமும் நிதியும்

வர்த்தகமும் நிதியும் Past Paper 1990 — 1994 வரை [1991—1992 Special] மொத்தம் 7 Exams Paper ஆக்கம். E. செல்வநாயகம், Royal College. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1369]

வரலாறு ஆண்டு 10, 11

G. C. E. O/L பரீட்சைக்குத் தயார் செய்வதற்கு வரலாறு குறிப்புகள் ஆண்டு 10, 11 உதவியாக அமையும். வினா - விடைகள் விளக்கங்களுடன் அமைந்துள்ளன. ஆக்கம்: N. Mylvaganam, B. A. (Cey) Modern History (Special), Dip-in-Ed. (Cey.) புத்தகசாலைகளில் பெறலாம். (36618)

மணமகன் தேவை

29 வயதுடைய, கத்தோலிக்க, சமய ஆசிரியைக்கு [கலைப் பட்டதாரி] அரசாங்க, தனியார்துறையில் உத்தியோகம் பார்க்கும் பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். ஆசிரியர் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்க: இல. 792, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (36649)

சிறிமாவோ நாடு திரும்பினார்

கொழும்பு, மே 16 அவசர மருத்துவ சிகிச்சைக்காக லண்டன் சென்றிருந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்பினார். இவர் மருத்துவ சிகிச்சைக்காக கடந்த 23 ஆம் திகதி லண்டன் சென்றிருந்தார். (இ-7)

அறிவியல் கழகத்தில் புதிய வகுப்புகள்

யாழ்ப்பாணம், மே. 16 ஆராய்ச்சியின் அடிப்படைகள் என்ற தலைப்பில் சக்தி பெறப்படும் வழிவகைகள் தொடர்பான வகுப்புகள் மாணவர் அறிவியல் கழகத்தில் நடைபெறவுள்ளன.

முதலாவது வகுப்பு நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். பங்குபற்ற விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

மூலையில் ஒதுங்கி இருக்கும் வள்ளுவர்!

தென்மராட்சி, மே 16 திருவள்ளுவர் உருவச்சிலை ஒன்று தேடுவாரற்ற நிலையில் பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டப மூலையில் காணப்படுவதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-117)

பளையில் கம்பியூட்டர் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, மே 16 கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் பளைப் பகுதியில் கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கென பளைப்பிரதேச செயலகத்தினால் இவ்வாண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் ரூபா இரண்டு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

வடக்கு- கிழக்கில் போர் நிலை மோசமடையும் போது

தமிழர்கள் இம்சைக்கு உள்ளாவது சர்வ சாதாரணமாகிவிட்டது!!

செல்லச்சாமி பாதுகாப்பு அமைச்சருக்கு மகஜர்

கொழும்பு, மே 16 ''வடக்கு - கிழக்கில் போர் நிலை மோசமடையும் போது இவ்விரு மாகாணங்களுக்கும் வெளியில் வாழும் தமிழ் மக்கள், குறிப்பாக மலையக மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் இம்சைக்கும் உள்ளாக்கப்படுவது வழக்கமாகி விட்டது. இந்த நிலைக்கு ஒரு முடிவு காண வேண்டும்''

இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு எம். எஸ். செல்லச்சாமி பாதுகாப்பு அமைச்சருக்கு சமர்ப்பித்த மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் தேடுதல், கைது நடவடிக்கைகள் தமிழ் மக்களையும் குறிப்பாக மலையக மக்களையும் தேவையற்ற துன்பத்துக்கும் துயரத்துக்கும் உள்ளாக்குகின்றன. இதனால் அவர்களுக்கு உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பாரிய பாதிப்பு ஏற்படுகிறது''—எனவும் மகஜர் கூறுகிறது. (ஒ-க)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் கிளைத் தலைமையகம்

முக்கிய அறிவித்தல்

கொழும்புத் தலைமையகத்தின் அறிவுறுத்தலின் படி எமது கிளையின் 1995 ஆண்டுப் பொதுக் கூட்டமும், தேர்தலும் பிற்போடப்பட்டுள்ளன.

நன்றி
செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
13-05-95 (சி/1220)

சென். ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்
பழைய மாணவர் சங்கம்

வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக் கூட்டமும்

மேற்படி ஒன்று கூடல்
22 — 05 — 1995 திங்கட்கிழமை
கல்லூரியில் நடைபெறும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்களை அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

முற்பகல் 7-00 — நற்கருணை ஆராதனை
முற்பகல் 8-15 — காலைப் போசனம்
முற்பகல் 9-00 — வருடாந்தப் பொதுக் கூட்டம்
முற்பகல் 10-00 — ''கிரிக்கெற்'' ஆட்டம்
பிற்பகல் 1-00 — மதிய போசனம்
பிற்பகல் 1-45 — 'கிரிக்கெற்'' ஆட்டம் தொடரும்
பிற்பகல் 4-00 — அதிபரின் தேநீர் விருந்து
பிற்பகல் 4 45 — உதைபந்தாட்டம்

போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 20 - 05 - 1995 இற்கு முன்னதாக காலைப் போசனம் ரூபா 30/- மதிய போசனம் ரூபா 70/- ஐ பொருளாளர் திரு. T. நந்தகுமாரிடம் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

சகல அங்கத்தவர்களுக்கும் தபால் மூலம் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாதவர்கள் இதனை அழைப்பாக ஏற்று சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

கா. சோமசுந்தரம்,
தலைவர்.

திரு. A J. கதிர்காமர்,
செயலாளர்.

பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம். [36657]

7-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 — 01 — 1972

உதிர்வு: 16 — 05 — 1988

செல்வி ந. அருந்தவமலர்
(வவி)
(சரவணை கிழக்கு)

விண்ணில் கலந்த உன் உயிரை
எண்ணிக் கலங்கும் இதயங்கள் எத்தனையோ
நினையாத நேரம் எம்மைப் பிரிந்த
அணையாத ஒளி விளக்கே அருந்தவமலரே
அன்பின் பிறப்பிடமாய் அருந்தவமலர் வவி என்று
ஆசையுடன் நாம் அழைத்து ஆண்டுகள் ஏழு-
சென்றாலும்
உன்னையே எண்ணித் தவிக்கின்றோம்
உன் நினைவுகளே எம்கண் முன்னே நிற்குதம்மா

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனையே
வேண்டுகிறோம்.

உமது பிரிவால் நினைந்துருகும்
பப்பா, அம்மா, அண்ணன் (பேபி),
சகோதரிகள், மைத்துனர்,
தம்பி (ரஞ்சித்)

26, கனகசபை வீதி,
மானிப்பாய். (36628)

பருத்தித்துறை கோட்டத்தில்

கணித மூலவள நிலையம்

பருத்தித்துறை, மே 16 பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கணித எண்ணக்கருவை விருத்தி செய்ய புலோலி மெ. மி. த. க பாடசாலையில் கணித மூலவள நிலையம் எதிர்வரும் 24 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது

இந்த மூலவள நிலையத்தில் சேர்ந்து கல்வி பயில விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கணித வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் இலவசமாக நடத்தப்படவுள்ளன. அத்துடன் மாணவர்களுக்கான தன்னறிவு வினாத்தாள்களும் அச்சிட்டுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, புலோலி ஆகிய பகுதிகளுக்குட்பட்ட மாணவர்கள் மாத்திரம் இவ்வகுப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனத்தெரிவிக்கப்பட்டது. (ஒ-118)

ஜி. சீ. ஈ. உயர் வகுப்பு பாடங்களை மாற்ற முடிவு

அடுத்த வருடம் முதல் அமுலாகும்

கொழும்பு, மே. 16 ஜி. சீ. ஈ உயர்தர வகுப்புக்குரிய பாடங்கள் மாற்றி அமைக்கப்பட உள்ளன. இது தொடர்பாக 47 பாடங்கள் ஏற்கெனவே சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு புதிதாக சிபார்சு செய்யப்பட்டுள்ள பாடங்கள் அடுத்த வருடம் முதல் அமுலுக்கு வரவுள்ளன.

இத்தகவல்களை தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி பிரேமதாச உடகம தெரிவித்தார்.

இதற்கமைய 1997 ஆகஸ்டில் நடைபெறும் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை புதிய பாடத்திட்டத்தின் கீழ் நடைபெறும்.

அதே சமயம் ஆண்டு 1, ஆண்டு 2, ஆண்டு 3 வகுப்புக்களுக்குரிய புதிய பாடத்திட்டங்களும், கற்பித்தல் முறைகளும் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய வகுப்புக்களுக்குரிய பாடத்திட்டங்களும் மாற்றி அமைக்கப்பட உள்ளன.

வலி. மேற்கில்

இடம் பெயர்ந்த முகாம்கள் பராமரிப்புக்கு ரூ. $3\frac{1}{2}$ லட்சம்

வலிமேற்கு, மே. 16 வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடம் பெயர்ந்த முகாம்களின் பராமரிப்புக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 28 இடம் பெயர்ந்த முகாம்கள் தொடர் குடிசைகளாகவும், தனிக்குடிசைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

சுழிபுரம், தொல்புரம், சங்கானை, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி ஆகிய இடங்களில் இந்த 28 முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த முகாம்களில் தெல்லிப்பழை, தீவுப்பகுதி, இளவாலை, மாதகல், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள சுமார் ஆயிரத்து நானூறு குடும்பங்கள் வசிக்கின்றன.

இந்த முகாம்களின் பராமரிப்புக்கு யாழ். செயலக திட்டப் பணிப்பாளரினால் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி தற்போது வழங்கப்பட்டுள்ளது.

திட்டப்பணிப்பாளர் தற்போது இந்த நிதியை பயன்படுத்துமாறும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சில் இருந்து மேலதிக நிதி கிடைத்தவுடன் மேலும் நிதி வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (க-175)

இந்திய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்

இஸ்லாமியக் குழு எச்சரிக்கை

இஸ்லாமாபாத், மே 16 காஷ்மீரில் முஸ்லிம் மசூதி ஒன்று அழிக்கப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாக இந்தியநகரங்களை தாக்கப்போவதாக தீவிர இஸ்லாமியக்குழு ஒன்று எச்சரித்துள்ளது.

புனிததலத்தின் நெருப்பு காஷ்மீரோடு மட்டும் நின்றுவிடாது. இந்த நெருப்பு புதுடில்லியையும், பம்பாயையும் எரிக்கும். காஷ்மீரில் இந்தியா தனது சட்டபூர்வமற்ற பிரசன்னத்தை கைவிடும் வரை எங்களது புனிதப் போர் தொடரும்''

—இவ்வாறு ஹர்கத்துல் அன்சார்குழுவின் தலைவர் மௌலானா முகமட்பாரூக் பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் தலைநகரில் இருந்து விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். [ஒ-3]

‘கொக்குவில் இந்து’ வெளியீடு

யாழ்ப்பாணம், மே 16 கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் ''கொக்குவில் இந்து'' எனும் காலாண்டு [illegible] கடந்த 5 ஆம் [illegible] (க-30)

மீன் விலை குறைந்தது

பருத்தித்துறை, மே 16 பருத்தித்துறை மீன் சந்தையில் மீனின் விலை திடீரெனக் குறைந்துள்ளது. பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்படையினரின் நடமாட்டம் குறைந்து காணப்படுவதனால் மீனவர்கள் பகலிலும் அதிகாலையிலும் சென்று மீன் பிடித்து வருகின்றார்கள். [ஒ-118]

ஆலயங்களில்

கரணவாய் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் முனீஸ்வரன் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் வேள்வியும் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 20 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும். (க-15)

‘வெளிச்சம்’ நாளை வரும்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாத வெளியீடான வெளிச்சம் கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் நாளை வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய 'சலுகைகளுக்காக எவரிடமும் நாம் கைநீட்ட மாட்டோம்' என்ற கருத்துரையும், பிரம்மஞானியின் 'அபத்தமும் அர்த்தமும்' கட்டுரைத் தொடரும் மற்றும் கட்டுரைகள், கவிதைகள் போன்ற பல அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. (ஓ)

சாவகச்சேரிப் பகுதியில் மலேரியா ஒழிப்பு

யாழ்ப்பாணம் மே 16 தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பகுதிகளில் மலேரியாவை தீவிரமாக கட்டுப்படுத்த சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. ரி. சிவபாதம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பகுதிக்கு 33 பெட்டி மலத்தியன் வழங்கப்பட்டுள்ளது. தவசிக்குளம், கச்சாய் மிருசுவில் வடக்கு, கோமர தோட்டம், கெற்பலி இடம் பெயர்ந்தோர் முகாம் கிளாலி பளைப்பகுதிகளுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் மூன்று குழுக்கள் மலத்தியன் தெளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தமது வீடுகளுக்கு மலத்தியன் பூரணமாக தெளிக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

இது தவிர கெற்பலி இடம் பெயர்ந்தோர் முகாமில் விசேட சிகிச்சை அளிக்கும் நிலையமும் செயல்படும். நோயாளருக்கு சிகிச்சைக்கு முன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் இலைக்கஞ்சி வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நோயாளரைத் தொடர்ந்து 5 நாள் பூரண சிகிச்சை பெற்று மலேரியாவைக் குணப்படுத்த ஒத்துழைக்கும்படி சுகாதார வைத்திய அதிகாரி கோரியுள்ளார். (க-18)

ஈ.பி.ஆர்.எல்.எவ். சந்திரிகாவை சந்தித்தது

கொழும்பு, மே 16 ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலர் தலைமையிலான தூதுக்குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது.

இச்சந்திப்பின் போது இன்றைய அரசியல், இராணுவ சூழ்நிலைகள் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி மேற்கொண்ட சமாதானப் பேச்சுகள் தொடர்பாகவும் பேசப்பட்டதாக ஈ. பி. ஆர். எல். எவ். தெரிவித்தது. (இ-7)

வணிக ஊழியருக்கு வைத்திய சேவை

யாழ்ப்பாணம், மே 16 யாழ். வணிக ஊழியர் கழகத்தில் அங்கத்தவர்களாக உள்ளவணிக ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்குமான இலவச வைத்திய சேவை பிரதி திங்கள், புதன், வெள்ளிகிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6மணி வரை கழகப் பணிமனையில் நடைபெறுகிறது. [ஒ-5]

விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 16 யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற கார், மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களான கிருஷ்ணபிள்ளை தர்மசீலன் (வயது 27 — புன்னாலைக்கட்டுவன்), கந்தையா ரகுநாதன் (வயது 41 — கோண்டாவில்) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ்ப்பாணம் சின்னக்கடை சந்தையில் வியாபாரம் செய்பவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-15)

வில்லூன்றி விநாயகர் ஆலய திருவிழா

யாழ்ப்பாணம், மே 16 வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய யுவ வருடப் பெருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும்.

கொடியேற்றம் 20ஆம் திகதியும், வேட்டைத் திருவிழா 27ஆம் திகதியும், தேர்த் திருவிழா 28ஆம் திகதியும், தீர்த்தத்திருவிழா 29 ஆம் திகதியும் திருவூஞ்சல் திருவிழா 30ஆம் திகதியும் இடம்பெறும். (க)

தனியார் விமான சேவை வழமைபோல்

கொழும்பு, மே 16 ''லயன் எயார்'' நிறுவனம் நடத்தும் உள்ளூர் விமான சேவைகள் எதுவித தடங்கலும் இன்றி நடைபெறுவதாக அந்த நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவர் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு, அனுரதபுரம், வவுனியா, திருமலை, சிகிரியா, வீரவில ஆகிய பகுதிகளுக்கான தனியார் விமான பயணிகள் சேவை வழமைபோல் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 16 தனியார் கல்வி நிறுவன ஒன்றிய மாவட்ட, கோட்ட நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நாளை புதன் முற்பகல் 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகல நிர்வாகிகளையும் அதில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

நேபாளத்தில் ஒரு ‘வீமன்’ சாப்பாட்டில் சாதனை!

காத்மண்டு, மே 16 நேபாள மாவட்ட சபை ஒன்றில் வேலை செய்யும் ஷேஷ்ராப் பிரசாத் சுபேதி என்பவர் அளவு கணக்கின்றி சாப்பிடுவதில் விற்பன்னராக விளங்குகின்றார் என அறியப்படுகிறது.

நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவின் கிழக்குப் பகுதியில் வாழும் இவர் அண்மையில் சக ஊழியர்களுடன் சுற்றுலாச் சென்றபோது இரண்டரைக் கிலோ ஆட்டுக் கொழுப்பு, ஒன்றரைக் கிலோ ஆட்டிறைச்சி, இரண்டரைக் கிலோ நெய்ச்சோறு, ஒன்றரைக் கிலோ சோறு ஆகியவற்றை உண்டார்.

குள்ளமான, 50கிலோ எடையுடைய இவர் இந்த சாப்பாட்டுக்குப் பின்னர் 25கப் தேநீரையும், 6லீற்றர் தண்ணீரையும் அருந்தி, பின் பழங்களும் சாப்பிட்டார் என்று 'காத்மண்டு போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

5மணி நேரத்தில் அவர் இந்தச் சாப்பாட்டுச் சாதனையைச் செய்து முடித்தார்.

ஆனால் சுபேதி இவ்வளவையும் சாப்பிட்ட பின்னரும் அவருடைய பசி அடங்கவில்லை. தொடர்ந்தும் அவரால் சாப்பிடமுடியும் என்று கூறினார்.

''சாப்பிட்ட பின் நான் ஒரு போதும் நோயுற்றதில்லை. எவ்வளவு சாப்பாடும் எனக்கு ஜீரணித்துவிடும்'' என்று அவர் கூறினார்.

சுபேதி வெளியே போகும் போது தான் இப்படிச் சாப்பிட முடியும். வீட்டில் 250 கிராம் சோறு தான் அவருக்குக் கிடைக்கும். (க)

ST· JOHN'S INSTITUTE
for
CAREER GUIDANCE

இல்வரும் கற்கை நெறிகளுக்கான வகுப்புக்கள் 19 - 05 - 95 மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

G. W. Basic (3 மாத பாடநெறி)
PASCAL (3 மாத பாடநெறி)

விபரங்கள், விண்ணப்பங்களுக்கு:-
காரியாலயம்,
பரி. யோவான் ஆலயம், கண்டுக்குளி.
(சி- 1217)

உதயன்
[illegible]2/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

நம்பிக்கைத் துரோகம்

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இவ் வருட ஆரம்பத்தில் ஏற்பட்ட மோதல் தவிர்ப்பைக் கண்காணிப்பதற்காக வந்திருந்த மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள், இவ்வாரத்தில் தத்தமது நாடுகளுக்கு திரும்ப உள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்து சுமார் ஒருமாதமாகிறது. இப்போது இரு சாராரும் நாளாந்தம் மோதிக் கொண்டே இருக்கிறார்கள். இதனால் சமாதான சூழ்நிலை ஒன்று மீண்டும் உருவாகுமா என்பது பெரிய கேள்விக் குறியாகி விட்டது. ஆதலால் அவர்கள் நாடு திரும்புவது ஒன்றும் ஆச்சரியத்துக்கு உரியதல்ல.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நின்று பிடித்த நூறு நாள்களில் கூட, வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தமது கடமையைச் செய்ய முடியவில்லை என்பது தெரிந்ததே.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மேலோட்டமான ஓர் ஆவணமாகவே இருந்தது. மோதல் தவிர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கான நடைமுறை விதிகள் அதில் போதியளவு இருக்கவில்லை. ஆகையால் கண்காணிப்பு வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர், அது சம்பந்தமான விதிமுறைகள் நுணுக்கமான முறையில் வகுக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டினர்.

அதனைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுக்களுக்கு தலைமை வகிப்பதற்கென்று நோர்வே, நெதர்லாந்து, கனடா ஆகிய மேலை நாடுகளில் இருந்து வந்த பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் விவரமான பேச்சு நடத்தினார்கள்.

மோதல் தவிர்ப்பைக் கண்காணிப்பதற்கு நடைமுறை விதிகள் போதாது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் அரசாங்கம் இது விடயத்தில் போதிய அக்கறை காட்டவில்லை. கண்காணிப்பு குழுக்களைச் செயற்பட வைப்பதில் ஏனோ தானோ என்ற போக்கையே கடைப்பிடித்தது. அரசின் அந்த நிலைப்பாடு குறித்து ஆழ்ந்து சிந்தித்தால் போரை மீண்டும் தொடங்கும் உத்தேசம், உள்நோக்கம் ஆரம்பத்திலேயே அதற்கு இருந்தது என்றே எவரும் கருத நேரிடும்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்து மீண்டும் போர் ஆரம்பமாகியதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று அரசாங்கம் தீவிர பிரசாரம் செய்து வருகிறது. ஆயினும் மோதல் தவிர்ப்பை நீடித்து, சமாதானச் சூழ்நிலையை நிலை நிறுத்தக் கூடிய அணுகுமுறை எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை என்பதே உண்மை நிலை. அதுவே மீண்டும் போர் வெடிப்பதற்குக் காரணம்.

நாம் இப்பத்தியில் அடிக்கடி எடுத்துரைத்தது போல, தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்த்து, செயற்பட்டு சமாதானத்தை அடைய முடியும் என்று அரசு கருதியதும் மோதல் தவிர்ப்பு முறிவதற்குப் பிரதான காரணம்.

மோதல் தவிர்ப்பு முறிந்து போர்மூண்டுள்ள இவ் வேளையில், விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மிகப் பலமான நிலையில் நிற்கும் சூழ்நிலையில், மீண்டும் சமாதானம் ஓர் சின்னஞ்சிறிய ஒளிக்கீற்றாகவேனும் தென்படுமா என்பது சந்தேகம்.

தமிழர் பிரச்சினையை தீர்த்து வைத்து நியாயம் வழங்குவார் என்று தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் வைத்திருந்த நம்பிக்கைக்கு சந்திரிகா துரோகம் இழைத்து விட்டார். எனவே மீண்டும் சமாதானம் என்பது இப்போதைக்கு நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றாகிவிட்டது என்றே கூறலாம்.

மனிதாபிமான நோக்கோடு அணுக வேண்டிய விவகாரம் இது

ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் கூறுகின்றார்

ஆற்றலும், ஆர்வமும் உள்ள அனைவருக்கும் கல்வி வழங்குவதே ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அதிகம் உதவக் கூடிய கல்விக் கோட்பாடாகும்.

இந்த நாட்டில் அந்த வாய்ப்பு இல்லாமை நாட்டின் முன்னேற்றத்துக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதைக் காண்கிறோம்.

எமது பிரதேசத்தின் வளங்களை விருத்தி செய்யவாவது தமிழீழத்தவர் அனைவரும் ஒற்றுமையோடு செயல்படுவது அவசியமாகும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் வைத்தியத்துறை மாணவர்களின் நிலைப்பாடு ஏற்புடையதே.

எனினும் பேராசிரியர் நந்தி வேண்டிக் கொண்டது போல, தனியார் மருத்துவ கல்லூரி மாணவர்களின் பிரச்சினையை மனிதாபிமான நோக்கோடு அணுகுவதும்—

தற்போது நாட்டில், ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு 2ஆவது எம். பி. பி. எஸ் தகுதி பெற்ற மாணவர்கள் தொடர்ந்து கல்வி பெற அனுமதிப்பதும்— சாலச்சிறந்தது எனக் கொள்ள வேண்டும். இவ்விவாகரத்தை நிச்சயமாக மனிதாபிமான நோக்கோடு பார்க்க வேண்டிய தேவைஉருவாகியுள்ளது. இதனை சமூகத்தின் பல மட்டங்களிலும் உணர்வதை அவதானிக்க முடிகிறது.

நாட்டத்துக்கு ஏற்ப கல்வி பெறும் ஆர்வம் உள்ள இந்த 37 மாணவர்களும் தம்மை தமிழீழ பணியில் ஈடுபடுத்தும் தலையாய கடப்பாடு உடையவர்கள் என்பதை உணர வேண்டும்.

இவ்வாறு பிரபல கல்விமானும் பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபருமான திரு. ஆர். எஸ். நடராசா கருத்துத் தெரிவித்தார்.

★

37 மாணவர்களின் கல்வியும் இடை நடுவில் பாதிக்கப்படக் கூடாது

தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் மகாசிவம் கருத்து

தனியார் மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற 37 மாணவர்களும்எமது பிள்ளைகளேயாவர்.

அவர்களின் உயர்கல்வி எக்காரணம் கொண்டும் இடைநடுவில் தடைப்படக் கூடாது;

தற்போதைய மாணவர்களின் கல்வி பாதிக்காத அளவில் இவர்களையும் மருத்துவ பீடத்தில் இணைத்துக் கொள்ளலாம் என்று பல்கலைக்கழக நிர்வாகமும் மற்றும் பிரபல வைத்திய நிபுணர்கள், முன்னாள் பீடாதிபதிகள், கல்விமான்கள் ஆகியோரும் கருத்து தெரிவித்துள்ளதை மருத்துவ பீட மாணவர்கள் பரிசீலனைக்கு எடுத்து, தங்களை அது பாதிக்கவில்லை என்பதை உணர்ந்து செயற்படுவதே சாலச் சிறந்த நடைமுறையாகும்.

தமது கல்வியைப் பாதிக்காத வகையில் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை அனுமதிக்கலாம் என்ற மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் முடிவு நியாயமானது.

மருத்துவபீட மாணவரின் கல்வி பாதிக்கப்படாத வகையிலேயே வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர் அனுமதிக்கப்படுவர் என்பதே பல்கலைக்கழக நிர்வாகத்தின் நிலைப்பாடாகவும் உள்ளது.

எனவே பல்கலைக்கழக நிர்வாகத்தின் வேண்டுகோளை ஏற்று மருத்துவபீட மாணவர் உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்பது சகல தரப்பினருக்கும் ஆரோக்கியமானதாக அமையும்.

நாம் எந்தச் சூழலில், எந்தளவு ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட பின்னணியில் வாழ்கிறோம் என்பதனை அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டிய தேவை உண்டு.

— இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கூறினார்.

★

பொருளாதாரத் தடையை நீக்குமாறு மக்கள் அரசை வலியுறுத்த வேண்டும்

வாசுதேவ எம். பி. கோரிக்கை

கொழும்பு மே 16

சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து, வடக்கின் பொருளாதாரத் தடையை நீக்கும்படி அரசை வலியுறுத்த வேண்டும்.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டியில் டி. எஸ் சேனநாயக்கா வாசிகசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழ் மக்கள் அதிகமாக வாழும் வடக்கு—கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டு ஒரே சுய ஆட்சி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

அதேவேளை முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் பிரிவுகளை உள்ளடக்கிய முஸ்லிம் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரச ஆட்சியில் இருந்தாலும்—

கடந்த 17 ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலாளித்துவ பிரதிநிதிகளைக் கொண்ட அரச நிர்வாக அமைப்பும், அந்த கொள்கைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அதிகாரிகளும் தான் இன்றும் இருக்கின்றனர்.

இந்நிலை மாறி, விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் ஏழை எளிய மக்கள் தமது பிரதேச நிர்வாகங்களில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.— என்றார். (ஐ-4)

சுயசார்பு கடன்

தென்மராட்சி, மே 16

தமிழர் புனர்வாழ்வுக் கழகபளைப் பிரிவினர் இப் பகுதியில் உள்ள பதினொரு பயனாளிகளு சுயசார்புக் கடனாக 65ஆயிரம் ரூபாவை கடந்த மாதம் வழங்கினர்.

ஆரோக்கிய சமுதாயம் உருவாக மொழி, கலாசாரத்தைபேண வேண்டும்

கம்பன்விழாவில் உரை

யாழ்ப்பாணம், மே 16

''விரக்தியும் தாழ்வுமனப்பான்மையுமற்ற ஆரோக்கியமான சமுதாய உருவாக்கத்திற்கு மொழியும், கலாசாரமும் பேணப்படுதல் வேண்டும்.''

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய வைத்திய கலாநிதி எஸ். கருணாகரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசியபோது கூறியதாவது:-

சுதந்திரம் கிடைத்தபின் தமிழினம் அரசியல், பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுவந்துள்ளது. தங்கள் உரிமைகளுடன் நிம்மதியாக வாழமுடியாத தமிழ் மக்கள் யுத்த நிலை காரணமாக அகதிகளாக இடம் பெயர்ந்து செல்கிறார்கள். இதேவேளை யுத்தத்தைக் காரணமாகக்கொண்டு தமது பொருளாதார நிலைகளை உயர்த்தவும் பலர் வெளிநாடுகளை நோக்கிச் செல்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களால் எமது கலாசாரமும் பண்பாடுகளும் தொடர்ந்து பேணப்படும் என எண்ணமுடியாது. அங்கு சென்றுள்ளவர்கள் அவற்றைக் கடைப்பிடித்தாலும்கூட அவர்களது குழந்தைகள் எமது கலாசாரத்துடன் ஒத்துப்போகும் நிலையில் இல்லை.

மேற்குலக கலாசாரங்களின் தாக்கத்திற்கும் எமது பண்பாடுகளுக்கும் இடையில் சிக்கி மனம் தளர்ந்த தாழ்வு நிலையில் அவர்கள் வாழுகிறார்கள். 13 வயதிலேயே கருத்தடை மாத்திரைகளை உபயோகிக்கும் அந்த நாட்டுப் பிள்ளைகளின் பழக்கவழக்கங்களில் இருந்து எமது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கப் பெரும் பிரயத்தனப்படுகிறார்கள். இதனால் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையே விரிசல்கள் ஏற்படுவதுடன் ஆசிய நாட்டவர்களைக் கண்டாலே வெறுப்படையும் அளவுக்கு அந்த நாடுகளில் உள்ள எமது வருங்கால சந்ததியினர் மாறுபட்ட நிலையில் வளர்கிறார்கள்.

இது தவிர்க்கப்பட வேண்டும். சிறுவயது முதலே எமது சமய கலாசார பண்பாட்டு நிலைப்பாடுகள் போதிக்கப்பட வேண்டும். இப்படியான போதனைகள் மூலம் வெளிநாடுகளில் வதியும் எமது வருங்கால சந்ததியும் தாழ்வு மனப்பான்மை [illegible] யும் என்பதையும் நான் அனுபவத்தினூடாகக் கண்டுள்ளேன். கம்பராமாயணம் திருக்குறள் போன்ற அறநூல்களை அது கூறும் கருத்துக்களை வெளிநாடுகளில் உள்ள எம்மவர்கள் தெரிந்து கொள்ளக்கூடிய தான உலகளாவிய பணிகள் தேவை. இங்கிலாந்தில் வாழும் சீனன் தன்னுடைய மொழியை கலாசாரத்தை தான் வாழுமிடத்தில் கட்டிக்காக்கிறான். சீனர் அதைத்தாழ்வாக நினைப்பதில்லை. எம்மவர்களும் எமது மொழி கலாசாரத்தை ஏற்று நடக்கக்கூடியதாக கம்பன் கழகத்தின் பணி தொடரவேண்டும் இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா, யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், தமிழீழகல்விக்கழகப் பொறுப்பாளர் வண். பிரான்சிஸ் [illegible] யோரும் பேசினார்கள். [illegible]

மருத்துவ மாணவருக்கு ஓர் அன்பு வேண்டுதல்

பேரன்புடைய மருத்துவபீட மாணவர்களே!

நீங்கள் உண்ணாவிரதம் இருந்து உடலை வருத்துவது, அதனால் உண்டாகக் கூடிய பாதிப்பு என்பனவற்றை எண்ணும்போது மனக் கவலை ஏற்படுகிறது.

வாழு! வாழவிடு!! என்பது எமது சமூகத்தின் உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடு. மனித நேயம் மனிதப் பண்புகளில் உன்னத நிலை வகிப்பது. எனவே இந்த இரண்டினையும் மனதிற்கொண்டு உங்கள் சகோதரர்களுக்கு உதவுங்கள். அவர்கள் அந்நியர்கள் அல்லர். தமிழ் மண்ணில் பிறந்தவர்கள்.

உங்கள் கல்விக்குப் பங்கம் உண்டாகாமல் அவர்கள் கல்வியைத் தொடர வகை செய்வதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆகையால் உங்கள் சகோதரர்களும் இந்த மண்ணுக்குத் தொண்டு செய்யச் சந்தர்ப்பம் கொடுங்கள். பிறருக்கு உதவுபவன் என்றுமே பெரியவன. எங்கள் வாழ்க்கையே நிலையற்றதாக இருக்கும்போது அந்தஸ்து எம்மாத்திரம்?

மனதை மனிதாபிமான நிலைக்குப் பக்குவப்படுத்திக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு கைகொடுத்து உதவுங்கள். சமூகத்தின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

என்றும், எங்கும் வேண்டுவது இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

முதல்வர், நல்லை ஆதீனம்
15-5-1995

பெருந்தன்மை பேணுங்கள்

பேரகபுகழும் பெருமதிப்புககுமுரிய யாழ். மருத்துவபீட மாணவர்களே!

உண்ணாவிரதத்தால் உங்கள் உடல் நிலை பாதிப்படைவதை எம்மால் உணர முடிகிறது. இந்த நிலையில் உங்கள் சகோதர மருத்துவ மாணவர்களை நீங்கள் நேசக்கரம் நீட்டி வரவேற்க வேண்டும் என்பதே எமது பெரு விருப்பம்.

உங்களுக்குப் பின்னால் நின்று தமது மருத்துவக் கல்வியை தொடர்ந்து இந்த மண்ணிலேயே தமது சேவையை ஆற்ற வேண்டுமென்று உறுதி பூண்டிருக்கும் முப்பத்தேழு பேரையும் சேர்த்துக் கொள்வதால் உங்கள் பெருந்தன்மையும் உயர்பண்பும் இந்நாட்டுப் புத்திஜீவிகள், சமூகநலன் பேணுவோர், ஆன்மீகவாதிகள் அனைவராலும் பாராட்டக் கூடியதாக அமையுமென்பது எமது நம்பிக்கை.

தயவு செய்து எங்கள் கருத்துக்கும் செவிசாய்த்து ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

15-5-1995

ஊர்காவற் படைக்கு திருமலையில் ஆட்சேர்ப்பு

கொழும்பு, மே. 16

திருகோணமலையில் உள்ள சிங்கள, முஸ்லிம் பகுதிகளில், ஊர்காவற் படையினருக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு சேர்க்கப்படுவோருக்கு முன்னிலை காவல் அரண்களில் கடமை புரிவதற்கு ஏற்றவாறு, கனரக ஆயுதப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

அதே சமயம், வவுனியாவின் எல்லைப் புறத்தில் உள்ள ஆசைக்குளம், கல்வீரன் குளம், வேப்பங் குளம் ஆகிய இடங்களில் வசிக்கும் தமிழ் மக்கள், அங்குள்ள சிங்கள ஊர்காவற் படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

அது தவிர, தென் தமிழீழப் பிரதேச தமிழர்களும் ஊர்காவல் படையினரின் மிரட்டல்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், ஏனைய இராணுவ பிரதேசங்களில் உள்ள தமிழர்கள் சிங்கள, முஸ்லிம் ஊர்காவற் படையினரின் வன்முறைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். (ஒ-5)

புலிகளின் குரல் வானொலியில்

16 — 05 — 1995
செவ்வாய் இரவு
★ 8-02— ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10— அறிந்து கொள்ளுங்கள்
★ 8-20— நலந்தானா?— நாமாற்றிக் காய்ச்சல் பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
★ 8-30— செய்திகள்
★ 8-40— கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய ''புலம்பல்கள்
★ 8-50— மலரும் மொட்டுக்கள்

17 — 05 — 1995
புதன் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 715— நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-05 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15— தமிழிசை
★ 5-30— வானொலி மதியூகம்—20
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02— இவ்வாரம் இவர்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 —என்தெரிவு

முன்னாள் ராணுவதளபதி காலமானார்

கொழும்பு மே 16

இலங்கையின் முன்னாள், இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் றிச்சர்ட் உடுகம காலமானார்.

1963 ஆம் ஆண்டு இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட உடுகம மாத்தளைத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஈரானுக்கான இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றி உள்ளார். (ஒ-5)

தெருக்கூத்து

சண்டிலிப்பாய், மே. 16

சண்டிலிப்பாய் வட்டுவை பிரிவில் கிராம ரீதியாக போர்க்காலக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன இதேவேளை தற்போதைய போராட்ட நிலைமை பற்றி விளக்கும் தெருக் கூத்துக்களும் ஆங்காங்கே நடத்தப்பட்டு வருகின்றன. (ஒ-135)

பல்கலைக்கழக பிரச்சினைகள்:

விசாரணைக் குழுவில் தமிழர் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே 16

வடக்கு - கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி பிரச்சினை, கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிலவும் இட நெருக்கடி ஆகியன பற்றி, சம்பந்தப்பட்டோர் அரசுக்கு முறையீடு செய்திருந்தனர்.

அதனை அடுத்து இது தொடர்பாக ஆராய்ந்து, தீர்வினை முன்வைக்கும் முகமாக, குழு ஒன்றினை ஜனாதிபதி நியமித்தார்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவிலேயே தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் புறக்கணிக்கப்பட்ட விசாரணைக்குழு, தமிழ் மாணவர்களின் பிரச்சினைகளை எந்த அளவுக்கு சீர்தூக்கிப் பார்க்கும் என பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-5)

பூரண பொருளாதாரத் தடை வடக்கில் அமுலாக வேண்டும்

சிங்கள வாசகரின் விருப்பம்

கொழும்பு, மே.16

''நியாயத்துக்கு அப்பாற்பட்ட முறையில் எமது துருப்புகள் உணவுப் பற்றாக்குறையினால் கஷ்டங்களை அனுபவிக்கும் வேளையில் எமது அரசாங்கம் யாழ்ப்பாண மக்களுக்கு உணவை மாத்திரம் அல்ல, ஒய்வூதியம், சம்பளம், மருந்து ஆகியவற்றையும் அனுப்புகிறது.

யாழ்ப்பாணத்தில் அவர்கள் அரசாங்கத்துடன் யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கும் வேளையில் இப்படிச் செய்வது அர்த்தம் அற்றது.''

''தைலண்ட்'' ஆங்கிலத் தினசரியில் வெளிவந்த சிங்கள வாசகர் ஒருவரின் கடிதம் இவ்வாறு கூறுகிறது.

எமது நிலைமையில் நாம், எந்த சக்தியினதும் அழுத்தத்துக்கு அடிபணியாமல் பூரண பொருளாதாரத் தடையொன்றை அமுல்படுத்த வேண்டும் எனவும் இக்கடிதம் கூறுகிறது. (ஒ-க)

மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை, மே 16

பருத்தித்துறை கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை காலை 8-30 மணிக்கு பருத்தித்துறை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. இராஜேந்திரன் கலந்துகொண்டு, பரிசில்களையும் வழங்கவுள்ளார். [ஒ-118]

★ ★ ★

வயாவிளான் குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய் பிற்பகல் 2மணிக்கு புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு இ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். (ஒ)

காஷ்மீர் புனித தலம் தீக்கிரை:

பாகிஸ்தானில் துக்கம் அனுஷ்டிக்க அரசு ஏற்பாடு

எதிர்ப்பு பேரணிகளும் நடக்கும்

இஸ்லாமாபாத், மே 16

எதிர்வரும் வெள்ளிக்கிழமையை தேசிய மறுப்பு நாளாகவும் துயர் பகிரும் நாளாகவும் கடைப்பிடிக்க பாகிஸ்தான் அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

இந்திய நிர்வாகத்தின்கீழ் உள்ள காஷ்மீரில் முஸ்லிம் புனித ஸ்தலம் ஒன்றும் பள்ளி வாசல் ஒன்றும் அழிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் ஒழுங்கு படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் ஸ்தலங்கள் அழிக்கப்பட்டது தொடர்பாக பாகிஸ்தானில் ஏற்கனவே ஆர்ப்பாட்டங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன.

வெள்ளியன்று நடக்க இருக்கும் பேரணிக்கு பிரதமர் பெனாசிர் பூட்டோ தலைமை வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய பாதுகாப்பு நிலைமையை ஆராய உயர் இராணுவத் தளபதிகளின் கூட்டம் ஒன்று இன்று நடைபெற இருக்கிறது. இந்தக் கூட்டம் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடப்பதற்கே முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் காஷ்மீரில் உருவாகியுள்ள முறுகல் நிலைமை அடுத்து இன்று நடைபெறவுள்ளது. (ஐ-4)

நரோமா பயணிகளுக்கு அனுமதி வழங்க புதிய இடம்

கொழும்பு, மே 16

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் ''நரோமா'' கப்பலுக்கான பிரயாண அனுமதிச்சீட்டு இனிமேல் கொள்ளுப்பிட்டியிலுள்ள ''ரேப்பிய'' கூட்டுறவு கட்டத்தில் வைத்தே வழங்கப்படுமென்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அலுவலகத்தில் வைத்தே அண்மைக் காலம் முதல் வடபகுதி பயணிகளுக்கான பயணச்சீட்டின் ஒருபகுதி வழங்கப்பட்டு வந்தது. புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அடுத்து பயணிகள் எவரையும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அலுவலகத்தினுள் அநாவசியமாக அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 22 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து புறப்படும் நரோமா கப்பலுக்கு பயணிகள் தம்மை பதிவு செய்து கொள்ளும் பொருட்டு ''றேப்பியா கட்டத்துக்குச்சென்றனர் என்றும் இடநெருக்கடி காரணமாக பெரும எண்ணிக்கையானோர் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிய வருகிறது. [ஐ-4]

நரசிம்மராவின் அரசை பதவி விலக வற்புறுத்து

புதுடில்லி, மே 16

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் ஸராரே ஷரீப்பில் உள்ள ஷேக் நூருதீன் வலி புனித தலம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் அரசாங்கத்தின் கவனமின்மையாலேயே நிகழ்ந்தது ஆகவே பிரதமர் நரசிம்மராவின் அரசாங்கம் ராஜினாமா செய்ய வேண்டும்.

இவ்வாறு நேற்று லோகசபையில் எதிர்க்கட்சிகள் கூட்டாக கோரிக்கை விடுத்தன.

ஸராரே ஷரீப்பில் வெளிநாட்டுக் கூலிப் படைகளின் நடமாட்டம் இருந்ததாக கடந்த டிசம்பர் மாதமே அறிவிக்கப்பட்டிருந்தது.

அப்படியிருந்தும் அரசு பாதுகாப்பு எடுக்காததாலேயே இத்துக்ககரமான சம்பவம் நடந்ததாகவும் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

இந்தியாவின் சமய சார்பில்லாத கொள்கைக்கு விழுந்த பேரடி இது என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ஸராரே நகர் இப்போது படைகளின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், நிலைமை வழமைக்குத் திரும்பி உள்ளதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மாநிலத்தில் தேர்தல் நடத்தும் முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை என்று ஆளுநர் கிருஷ்ணாராவ் தெரிவித்தார். (அ)

அடுத்த தேர்தலுக்கு ஜே.வி.பி. தயாராகிறது

கொழும்பு, மே 16

ஜே. வி. பி. இயக்கத்தின் விசேட கூட்டம் ஒன்று தங்காலையில் இன்று நடைபெறவுள்ளது. தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து அந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி. அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு தேர்தலுக்குத் தயாராகும் வகையில் ஜே.வி.பியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு சமாதானம், சுபிட்சம், ஜனநாயகம் என்பவற்றை இரு பிரதான கட்சிகளாலும் ஒரு போதும் வழங்க முடியாது.

நாட்டை ஆண்டு வந்த இரு கட்சிகளிடமும் இதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை.

அடுத்த பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியமைக்கக் கூடிய கட்சியாக ஜே. வி. பியை மாற்றுவதே எமது நோக்கம் ஆகும்.

— இவ்வாறு ஜே. வி. பியின் அரசியல் குழு உறுப்பினரும், பிரசாரப் பொறுப்பாளருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார். [ஐ-6]

பாதிப்பு விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 16

வன்செயல்கள் மற்றும் இயற்கைக் காரணிகளால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் பாதிப்புக்கள் பற்றிய விவரங்கள் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் திரட்டப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் யா/125 கொக்குவில் மேற்கு பிரிவுக்கு கிராம சேவையாளர் அலுவலகத்திலும்—

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் யா/175 பண்ணாகம் பிரிவில் ஐக்கிய நாணய சங்கக் கட்டடத்திலும் இன்று செவ்வாய்க்கிழமை விவரங்கள் சேகரிக்கப்படும். (ஐ)

குண்டை வெடிக்க வைக்க முயன்ற தற்கொலைப் படையினர் கைதாம்!

கொழும்பு மே 16

விடுதலைப் புலிகள் தற்கொலைப்படையைச் சேர்ந்த பலரை, குண்டு ஒன்றை வெடிக்கச் செய்வதற்கு முன் அதற்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் கைது செய்ததாக கொழும்பில் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அரசியல் தலைவர்கள் மற்றும் படை உயர் அதிகாரிகளை கொல்வதற்கு திட்டமிட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வெசாக் தினத்தன்று கொழும்பில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக நேற்று முன்தினம் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக்கப்பட்டு இருந்தன. (ஓ-5)

நிலக் கண்ணி தயாரிக்க மெழுகுதிரி சேகரிப்பாம்

திருகோணமலை, மே 16

திருகோணமலை நகருக்கு அண்மையில் அமைந்துள்ள செல்வநாயக புரத்திலுள்ள வீடுகளிலிருந்தும் அங்குள்ள கடைகளில் இருந்தும் தமிழ் இளைஞர்கள் மெழுகுதிரிகளைச் சேர்த்துவருவதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக 'திவயின' பத்திரிகை தெரிவிக்கிறது

பெருமளவில் நிலக்கண்ணி வெடிகளைத் தயாரிக்கவே இந்த மெழுகுதிரிகள் சேர்க்கப்படுகின்றன என நம்பப்படுகிறதாம். 15 இளைஞர்களை ஈடுபடுத்தி சுமார் மூவாயிரம் மெழுகுதிரிகள் சேர்க்கப்பட்டதாக அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது

இதேவேளை செல்வநாயகபுரத்திலிருந்து 15 தமிழ் இளைஞர்கள் புலிகள் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இந்த இளைஞர்கள் படகுகள் மூலம் வடபகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது [ஓ-10]

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை

43 ஆயிரம் பேர் எல்லா பாடங்களிலும் சித்தி இல்லை

கொழும்பு, மே 16

1994 டிசம்பரில் நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. [சாதாரண தரப்] பரீட்சைக்குத் தோற்றிய 4 லட்சத்து 83 ஆயிரத்து 249 பேரில் 43 ஆயிரத்து 164 பேர் எல்லாப் பாடங்களிலும் சித்தியடையவில்லை என்ற அதிர்ச்சி தரும் தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

எஞ்சிய 4 லட்சத்து 40 ஆயிரத்து 85 பேரில் 2 லட்சத்து 40 ஆயிரத்து 390 பேர் நான்கு அல்லது நான்குக்கும்குறைவான பாடங்களிலேயே சித்தியடைந்துள்ளனர்.

ஆறு அல்லது ஆறுக்கும் அதிகமான பாடங்களிலும் தமிழ் அல்லது சிங்களத்துடன் கணிதத்திலும் சித்தியடைந்தோர் 94 ஆயிரத்து 221 பேர் ஆவர். இவர்கள் மொத்த வீதத்தில் 19.5 சதவீதத்தினர் ஆகும். (ஓ-க-7)

கூட்டுறவு பகுதியில் ஆளணி பற்றாக்குறை

விரைவில் நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 16

வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், மாவட்ட கூட்டுறவு அலுவலர்கள், முதலாம் தர கூட்டுறவு அலுவலர்கள், 2 ஆம் தர கூட்டுறவு அலுவலர்கள் ஆகியோருக்கு தற்போது பற்றாக்குறை நிலவுகிறது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் உடனடியாக 467 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்: இவர்களில் இருநூறு பேர் யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படுவர். (ஐ-5)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுப் போட்டியில் இணுவில் சந்தக மைதானத்தில் இன்று செவ்வாய் பிற்பகல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — சுன்னாகம் கலைவாணி வி. க எதிர் உடுவில் ஐக்கிய வி. க

★ பிற்பகல் 4 மணி — கைதடி திருவள்ளுவர் வி. க எதிர் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் வி. க

★ ★ ★

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, சம்பியன் கௌரவும் பரிசில் வழங்கலும் இன்று செவ்வாய் இரவு 7 மணி முதல் நீர்வேலி சந்தியில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறும். கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் பிரதம விருந் [illegible] வார். (ஐ)

பயிர் பதிவு குறித்து கலந்துரையாடல்

சமக்கார அறிமுக அட்டையில் பயிர் விவரம் பதிவு செய்வது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அதில் சகல விவசாயிகளையும் கலந்து கொண்டு திட்டம் வெற்றிபெற ஒத்துழைக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ)

வைத்தியசாலையில் இருந்து

டாக்டர் திருப்பி அனுப்பிய பெண் வீதியில் பிரசவம்

கண்டி, மே 16

மகப்பேற்றுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவரை, ''குழந்தை கிடைக்க இன்னும் பல நாள்கள் உள்ளன'' எனக்கூறி 'டிக்கற்' வெட்டி வீட்டுக்கு அனுப்பினார் வைத்திய அதிகாரி.

அந்தப் பெண் வீடு செல்வதற்காக வைத்தியசாலைக்குச் சமீபமாக பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருந்தார்.

சில நிமிட நேரத்தில் அந்தப் பெண்ணுக்கு பிரசவ வேதனை ஏற்பட்டது. குழந்தை பிரசவித்து விட்டார் வீதியிலேயே.

பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணே இந்த அனுபவத்தைப் பெற்றார் (ஓ-10)

மக்களையும் அரசியல்வாதிகளையும்

மகா சங்கத்தினரே வழி நடத்துகின்றனர்

ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மே 16

மகா சங்கத்தினர் கடந்த 25 நூற்றாண்டு காலமாக நாட்டு மக்களையும் அரசியல்வாதிகளையும் வழிநடத்தி வந்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின்போது அவர் உரையாற்றினார்.

எதிர்காலத்திலும் மகா சங்கத்தினர் அவர்களது உன்னத சேவைகளை தொடர்வார்கள் என்று தமது அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார். [ஐ-4]

+

OBITUARY

DAISY FRANCIS

The death is announced of ''Emily Constance Daisy'' beloved wife of late Mr Swampillai Francis (Retd. Head Clerk P.W D.), step mother of late Mrs Baby Manuelpillai, Mrs Ponrose Balthasar, mother of Mrs. Regina Satrukalsinghe (Australia), A R J. Francis (Canada), X S.Y Francis Jaipur Foot Work Shop - Jaffna, Dr. V. K. J Francis (General Hospital, Batticaloa), W M.W Francis (Australia) mother in law of late P D Manuelpillai. Mr M. Balthasar, late Cyril Satrukalsinghe, Rubamalar, Ranjithamalar, Rajini Inbam sister of late Mrs Rose Moses late Mrs. Blossom Dominic, Mrs Dulsy Henry and late Vincent Samuel, beloved grand mother of Ponrajah, Anandarajah (G.S Madhagal), Rangini Sarogini Sharmini, Pathmini. Rajkumar, Manoharan. Jeevoharan, Niroharan. Jeyakumar Nilanthie Pradeep. Julie, Nirmala (St Johns Nursery, Sharmilla (Staff. John Bosco) Angelo Rajeevani. Rajeevan Rajeevannan, Rajvannan John David and James.

Funeral will take place on 16-05-95 (Tuesday) at 56 St Anthonys Road. Batticaloa. friends and relations please accept this intimation.

A prayer meeting will be held on 16 - 05 - 95 today at 4. 30 p. m at 19/2 Eachamoddai Road Jaffna.

Informant:
X.S.Y. Francis
(Son)

[3660]

விஷவாயு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]. அமைப்பின் வேறு இரண்டு தலைவர்கள் [illegible] கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் இந்த அமைப்பைச் சேர்ந்த, விஷவாயு சம்பவத்தோடு நேரடியாக தொடர்பு உள்ளவர்கள் என சந்தேகிக்கப்படும் மேலும் 20 பேர் ஜப்பானியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். [ஐ-5]

கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) சேனையில் மற்றொரு இராணுவப் படையணிக்கு பாரிய இழப்புக்களை விடுதலைப் புலிகள் ஏற்படுத்தினர்.

கடந்த சனிக்கிழமை வாகரைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

தனது தோல்விகளை மறைத்து, படையினரை உற்சாகமூட்ட அரசு உண்மைக்கு மாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு 'புலிகளின் குரல்' செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]

கப்பலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] மற்றும் மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய பொருள்களை எடுத்து வர படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது (இ-3)

இஸ்ரேல்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) மாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஆட்சியின் போது — கொழும்பிலிருந்த இஸ்ரேல் தூதரகம் மூடப்பட்டது —

பின்னர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் திறக்கப்பட்ட இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் முஸ்லிம்கள் தெரிவித்த கடும் எதிர்ப்பை அடுத்து மூடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் தூதரகத்தை கொழும்பில் திறப்பதற்கு அவ்வப்போது எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டே வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது (உ-4)

உண்ணாவிரதம...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று நண்பகல் அளவில் கைவிட்டனர்.

இதேவேளை —

இதுவரை நடந்த — இது பற்றிய பிரச்சினைகள் தொடர்பாக — சம்பந்தப்பட்ட பீடங்கள் தத்தமது நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ததும் அனைத்துப் பீடங்களுக்குமான விரிவுரைகளும் ஆரம்பமாகும் என பல்கலைக் கழக வட்டாரங்கள் [illegible] தெரிவித்தன. [illegible]

குச்சவெளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ வீரவேங்கை பகலன் [கந்தசாமி சிவதீபன்]

★ வீரவேங்கை மணியரசன் [துரைராசா கிருஷ்ணரூபன்]

★ வீரவேங்கை இராசபாரதி [விஜயரத்தினம் [illegible]மாறன் — முல்லைத்தீவு]

[ஐ]

எடிசன் அக்கடமி
(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்

O/L கணிதம்
புதிய பிரத்தியேக கணித வகுப்பு
SPECIAL BATCH
ஆசிரியர்:
திரு B. P. பாஸ்கரன்
ஆரம்பம் 18-05-95
வியா பி. ப 6 மணி
திங்கள் - வியாழன் பி. ப 6 7.30 மணி
பாடத்திட்டம் முற்றாகப் பூர்த்தியாக்கப்படும்
(சி/1221)

மரண அறிவித்தல்கள்

வேலாயுதபிள்ளை குருநாதன்

(ஓய்வு பெற்ற மின் மானி வாசிப்பாளர்
யாழ். மாநகர சபை)

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை குருநாதன் (14-05-95) காலமாகி விட்டார் அன்னார் காலம் சென்ற வேலாயுதபிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்ற சபாரத்தினம், பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரேந்திரன் (பிரான்ஸ்), தேவானந் (பிரான்ஸ்), பிரேம்நாத் (கனடா), நிர்மலநந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீரங்கநாதன் (அரவிந் வீடியோ & போட்டோ ஆனைப்பந்தி), நவலோகநாதன் (பிரான்ஸ்) காலம் சென்ற திருமதி ராஜி தயாபரன் மற்றும் நரேந்திரன் (கனடா), லோகநாயகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாவாணி (பிரான்ஸ்), கனகாம்பிகை (பிரான்ஸ்), வளர்மதி, சரோஜா (பிரான்ஸ்), செந்தில்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வாஷினி, சுவந்தினி, சுபோதினி, அபிராமி, சாயி, சாயிராம், பவித்ரா, சமித்ரா, பிரியங்கன், பிரியங்கா, வினோத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-05-95) செவ்வாய் காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்
ஸ்ரீரங்கநாதன் [மகன்]
''அரவிந்''
[வீடியோ & போட்டோ]

கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[36655]

கதிரவேலு இராசா

இல 33, ஆடியபாத வீதி, நல்லூரைச் சேர்ந்த கதிரவேலு இராசா அவர்கள் 15-05-95 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் பவளம் அவர்களின் அன்புக் கணவரும், கணேசிங்கம் (இங்கிலாந்து), இரத்தினசிங்கம் (பொது சனத்தொடர்பு உத்தியோகத்தர், யாழ் மாநகர சபை), துரைசிங்கம் (கணக்காளர் கல்வித்திணைக்களம் கிளிநொச்சி முல்லைத்தீவு), இராசதுரை (இங்கிலாந்து), இராமசந்திரன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-5-95) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இ. இரத்தினசிங்கம்
இ. துரைசிங்கம்
(புதல்வர்கள்)

(36659)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிறெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள 16-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது